மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) & (இ) இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகள் இப்பொழுது எந்தெந்த இடத்தில் இருக்கின்றன? இந்த ஆண்டு வேறு ஏதாவது புதிய ஆஸ்பத்திரி கட்ட ஆலோசனை உண்டா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, ஈ.எஸ்.ஐ. ஹாஸ்பிடல்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய 3 இடங்களில் இருக்கின்றன. மேலும் அதை விரிவு படுத்த வேண்டுமென்ற எண்ணமிருந்தாலும் நிதி வசதி இல்லாத காரணத்தால் அது இப்போதைக்கு இல்லை என்று கூறுகிறேன்.

நடமாடும் பல்கலைக் கழகங்கள்.

* 388 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நடமாடும் பல்கலைக் கழகங்களை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மிதக்கும் பல்கலைக் கழகம் என்று சென்னைக்கு வந்ததை அறிவோம். அப்படி மிதக்கும் பல்கலைக் கழகம் நம்மால் அமைக்க முடியாது என்றாலும், நடமாடும் பல்கலைக் கழகம் என்ற பெயர்பெற்றவராக நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் காலத்திலேயே நடமாடும் பல்கலைக்கழகத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பள்ளிக்கூடத்தையே நடமாட விட முடியாது. ஆகவே இன்றைக்குக் கல்லூரிகளையோ அல்லது பல்கலைக்கழகத்தையோ நடமாட விடுவது என்பது இயலாத ஒன்று. வேண்டுமென்றால் ஆசிரியர்களை நடமாட விடலாம், பேராசிரியர்களை நடமாடவிடலாம். உலாவி வரச் செய்யலாம். ஏனென்றால் விசிட்டிங் ஃபுரொஃபசர்ஸ் என்ற முறையில் இருக்கிறார்கள். பல்கலைக்கழகத்திற்குப் பல்கலைக்கழகம், கல்லூரிக்குக் கல்லூரி பேராசிரியர்களையும் மற்றவர்களையும் வேண்டுமானால் அனுப்பலாம். ஆனால் இப்பொழுது வானொலியின் மூலமாகக் கல்வியைப் பரப்பும் முயற்சியில் உயர்நிலைப்பள்ளிகளுக்கும், துவக்கப்பள்ளிகளுக்கும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மதுரைப் பல்கலைக்கழகத்தில் கடிதப்போக்குவரத்தின் மூலம் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகளைச் சொல்லிக் கொடுக்கும் முயற்சியை மேற்கொண்டிருப்பதால் இந்தப் பட்டப் படிப்பிற்கு வானொலியைப் பயன் படுத்தலாம் என்ற முயற்சியும் இருக்கிறது. கடிதப்போக்குவரத்தோடு வானொலியிலே குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிச் சிறந்த பேராசிரியர்கள் சிலரை வைத்து அதன் மூலம் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கச் சொன்னால் கடிதப்போக்குவரத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். எனவே வானொலியின் மூலம் கல்வி கற்பிக்கின்ற சூழ்நிலையை மேற்கொள்ளலாம்.

1971 ஜூலை 23]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தக் கடிதப் போக்குவரத்து மூலமாக ஏற்படுத்துகின்ற பட்டப் படிப்புக்கு ஃபீஸ் அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதைப் பற்றிப் புனர் பரிசீலனை செய்து ஃபீஸைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பல்கலைக் கழகந்தான் இதை வகுத்திருக்கிறார்கள். அதற்காகும் செலவு மற்றவைகளை எல்லாம் கணக்கில் எடுத்து முறைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். கடிதப் போக்குவரத்து முறையில் பாடங்களை எல்லாம் அச்சடித்துப் புத்தக வடிவில் அனுப்புவதற்கு ஆகும் பெருஞ் செலவு எல்லாவற்றையும் கணக்கில் கொண்டு பல்கலைக் கழகம் அதை நிர்ணயித்திருக்கிறது.

டெலிவிஷன் மூலம் கல்வி

* 389 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் டெலிவிஷன் மூலம் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

செஞ்சிக் கோட்டையைப் புதுப்பித்தல்

* 390 வினு—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சிக் கோட்டை பழுதடைந்திருப்பதால் அதைப் புதுப்பிக்க மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இவ் வினுவிற்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : செஞ்சிக்கோட்டை தேசிங்குராஜன் ஆண்ட பழைய வரலாற்றைக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. அந்தக் கோட்டையில் இப்போது மத்திய சர்க்கார் பணியாளர்களைப் போட்டு உள்ளே செல்லுகின்றவர்களுக்குக் கட்டணம் வசூலிக்கிறார்கள். பண்டைக் காலத்து வரலாற்றைக் காட்டும் வகையில் அமைந்திருக்கின்ற அந்தக் கோட்டையைப் புதுப்பித்து பயணிகள் தங்கும் அளவுக்கு ஒரு சுற்றுலா மாளிகை அமைப்பதற்கு மத்திய சர்க்காரை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : செஞ்சிக் கோட்டையை மத்திய அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் கண்காணித்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழுதடைந்ததைப் புதுப்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதைப்பற்றி மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டதில் அந்தக் கோட்டை பழுதடையவில்லை யென்றும் அது ஓரளவு நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது